**அரக்கோணம் நகராட்சி**
**சாதாரண மன்ற கூட்ட அறிவிப்பு**

கூட்ட எண்.53 நாள்.26.02.2020.

பொருள் : சாதாரண மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 28.02.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

அரக்கோணம் நகராட்சி 28.02.2020 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள சாதாரண மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள்கள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி ஆணையாளர்(பொ) (ம) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி/2020 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண் :02**

இந்நகராட்சி பொது சுகாதாரவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் TATA ACE மினி லோடு வேன் (LCV) எண். TN73R 2340 தகுதிச்சான்று பெறவும், எஞ்சின் பழுது மற்றும் இதர பழுது நீக்கம் செய்யவும் மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| **வ. எ ண்** | **விவரம்** | **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திருத்தணி** | **வேலு மோட்டார் ஒர்க்ஸ் சென்னை–42** |
|---|---|---|---|
| 1 | **TATA ACE மினி லோடு வேன்எண். TN73R 2340 (LCV)** | 1, 13, 752/– | 1, 15, 876/– |

மேற்காணும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருத்தணி**, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண்.1414/எச்1/2019)**

**பொருள் எண் :03**

அரக்கோணம் நகராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரியும் திருமதி.வனஜா த/பெ சின்னையன், என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக காஞ்சிபுரம் பெருநகராட்சியில் காலியாக உள்ள துப்புரவு மேற்பார்வையாளர் பணியிடத்திற்கு பணியிடை மாறுதல் செய்ய ஆவணம் செய்து தருமாறு கோரியுள்ளார். எனவே மேற்காணும் பணியாளர் சமர்பித்துள்ள விண்ணப்பத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண் 120/எச்1/2020)**

**பொருள் எண் :04**

அரக்கோணம் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஈப்பு வண்டி எண். TN73 W5969க்கு அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கவும் மற்றும் காப்பீடு பிரிமியம் செலுத்த தோராய செலவினம் **ரூ.2.00** லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.1410/இ1/2013)**

**பொருள் எண் :05**

அரக்கோணம் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஈப்பு வண்டி எண். TN73T4896 க்கு அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்கவும் மற்றும் காப்பீடு பிரிமியம் செலுத்த தோராய செலவினம் **ரூ.2.00** லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u> மன்றம் அனுமதிக்கலாம்.**

**<u>(ந.க.எண்.1173இ1/2015)</u>**

**பொருள் எண் :06**

அரக்கோணம் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் Hydraulic Ladder எண். TN73W8881 தகுதிச்சான்று பெறவும் மற்றும் இதர பழுது நீக்கம் செய்யவும், தோராய செலவினம் ரூ.3.00 லட்சத்திற்கும், மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண். 887 /இ1/2018)**

**பொருள் எண் :07**

அரக்கோணம் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள பாதாள சாக்கடை அடைப்புகளை நீக்க பயன்படுத்தப்படும் Jet Rodding எண். TN73 AY4096 தகுதிச்சான்று பெறவும் மற்றும் இதர பழுது நீக்கம் செய்யவும், தோராய செலவினம் **ரூ.3.00** லட்சத்திற்கும், மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண். 887 /இ1/2019)**

**பொருள் எண் :08**

இந்நகராட்சியில் பகுதிகளில் சேகரமாகும் மக்கும் குப்பைகளை பூங்காக்கள் மற்றும் நுண்ணுயிர் உரம் மையம் மூலமாகவும் உரமாக்குவதற்கு தேவையான இ.எம்.சொலிசன் (EM SOLUTION) **500** லிட்டர் தேவைப்படுகிறது. எனவே இ.எம்.சொலிசன் (EM SOLUTION) **500** லிட்டர் கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.**6.00** லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : பொதுசுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 413/எச்1/2020**

**பொருள் எண் :09**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் நாய்கள் பயண வாகனம் எண். TN73V 9270 தகுதிச்சான்று பெற செய்ய வேண்டியுள்ளதால் நாய்கள் பயண வாகனம் பழுது நீக்கம் செய்ய **06.03.2020** அன்று மூடிமுத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி வரப்பெற்றுள்ளது மன்றத்தின் பார்வைக்கு சமர்பிக்கப்படுகிறது.

| **வ. எண்** | **விவரம்** | **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் திருத்தணி (GST 18 % உட்பட )** | **வேலு மோட்டார் ஒர்க்ஸ் சென்னை–42 (GST 18 % உட்பட )** |
|---|---|---|---|
| **1** | நாய்கள் பயண வாகனம் எண். TN73V 9270 | **1,15,800/–** | **1,19,500/–** |

மேற்காணும் மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோ மற்றும் இன்ஜினியரிங் ஒர்க்ஸ், திருத்தணி**, அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கிடவும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.074எச்1/2019)

**பொருள் எண் :10**

இந்நகராட்சியில் 2019–20 ஆம் ஆண்டின் வரி மற்றும் வரியில்லா இனங்கள் வசூல் பணி துரிதப்படுத்தவும் மக்களுக்கு வரி உடன் செலுத்த ஒலி பெருக்கி மூலம் ஆட்டோ விளம்பரம் மேற்கொள்ளவிலைப்புள்ளி கோரி விளம்பரம் செய்ய தோராய செலவினம் ரூ.50000/–க்கும் உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளி கோரியது பின்வருமாறு

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை(ரூ) |
|---|---|---|
| 1 | திரு தாஜிதின்<br>6/40 ஒத்தவாடை தெரு<br>உப்பபரபாளையம்<br>அரக்கோணம் | 2500.00 |
| 2. | திரு.அன்வர் பாஷா<br>8/41 ஒத்தவாடை தெரு<br>உப்பபரபாளையம்<br>அரக்கோணம் | 2800.00 |
| 3 | திரு.நிஜாமுதின்<br>8/40 ஒத்தவாடை தெரு<br>உப்பபரபாளையம்<br>அரக்கோணம் | 3000.00 |

**அலுவலக குறிப்பு:- மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு தாஜிதின் அவர்களுக்கு மன்ற அனுமதி எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.534/2019/அ1)**

**பொருள் எண் :11**

தணிக்கை அரக்கோணம் நகராட்சி 2018–19ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் தொகை ரூ.1,07845/– செலுத்துமாறு உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, வேலூர் அவர்களால் கோரப்பட்டுள்ளதால், இத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- 2018–19 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கை கட்டணம் தொகை ரூ.1,07845/– செலுத்த மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.458/2013/பி2)**

**பொருள் எண் :12**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் 40W குழல் விளக்குகள், கையடக்க குழல் விளக்குகள் (CFL), எனர்ஜி சேவர்பல்புகள் மற்றும் ஒளி உமிழ் விளக்குகள்(LED) பொருத்தப்பட்டு ஒளிரூட்டப்பட்டு வருகிறது. அவ்வப்போது பழுதடையும் தெருவிளக்குகளை பழுது நீக்கம் செய்யவும், தெரு விளக்குகளின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள

2020–21 ஆம் ஆண்டிற்கான மின் உதிரிபாகங்கள் வாங்க தோராய செலவினம் ரூ.7.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.**
**2) தெருவிளக்கு மற்றும் அதன் உதிரிபாகங்கள் அரக்கோணம் கூட்டுறவு சிறப்பங்காடியில் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.285/2020/இ1)**

**பொருள் எண் :13**

வார்டு மறுவரையறை ஆணையம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி இந்நகராட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட வார்டு மறுவரையறைக்கான கருத்துருவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதையடுத்து தமிழ்நாடு அரசிதழ் எண்.407. நாள்.14.12.2018 - ல் வார்டு வரையறைக்கான தமிழக அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டது குறித்த அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதனை அடுத்து உள்ளாட்சி அமைப்புகளில் 9 மாவட்டங்களுக்கு வார்டு மறுவரையறை மேற்கொள்ளுதல் தொடர்பாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் நடத்தப்பெற்ற 13.01.2020 தேதிய கானொளி காட்சி கூட்டத்தில் நடைபெற்ற கானொளி கூட்டத்தில் சில அறிவுரைகள் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம். ந.க.எண். 575/2020/தேர்தல், நாள்.21.01.2020-ல் வார்டு மறுவரையறையினை மறுஅறிவிக்கை செய்வது நிமித்தம் உரிய கருத்துரு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழிமுறையாக சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு அரக்கோணம் நகராட்சிக்கான வார்டு மறுவரையறையினை மறுஅறிவிக்கை செய்வதற்கான வரைபடம் மற்றும் பிரேரனை தயார் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டதற்கு கீழ்காணும் தயார் செய்ய உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | விவரம் | எண்ணிக்கை | P.M.R. பிளானர் சோளிங்கர் ரோடு அரக்கோணம் | J.M கன்ட சுவால் பேட்டை அரக்கோணம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு மறுவரையறை வரைபடம் மற்றும் பிரேரனை தயார் செய்தல் | 8 | ரூ.64,000/– | ரூ.70,000/– |

மேற்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய **P.M.R. பிளானர், அரக்கோணம்**, அவர்களுக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும், அதற்கான செலவின தொகை ரூ.64,000/– வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு :- மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**

**(ந.க.எண்.2639/2017/எப்1)**

**பொருள் எண் :14**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளில் அவ்வப்போது ஏற்படும் குழாய் உடைப்புகள் மற்றும் பொதுக்குழாய் குடிநீர் இணைப்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்ய 2020–21 ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.990000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2019**

**பொருள் எண் :15**

அரக்கோணம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ள 104 எண்ணிக்கை சிறு மின் விசைப்பம்புகள் மற்றும் 296 எண்ணிக்கை இந்தியா மார்க் –II கை பம்புகளை பராமரிக்க நகராட்சிகளில் போதிய ஆட்கள் இல்லாத காரணத்தினால் குடிநீர் பணியின் அவசியம் கருதி மேற்படி சிறுமின் விசைப்பம்பு மற்றும் கைபம்புகளிலும், கழிவறையில் உள்ள மின் மோட்டார்ஆகியவைகளை 2020–21 ஆம் ஆண்டிற்கு பாரமரிப்பு பணி மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.960000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.**

**ந.க.எண் .887/இ1/2019**

**பொருள் எண் :16**

இந்நகராட்சியில் வார்டு மறுவரை பணிகள் மற்றும் தேர்தல் வாக்குச்சாவடி பணிகள் மற்றும் இதர அலுவலக பணிகள் தொடர்பாகவும் அறிக்கைகள் தயார் செய்ய எழுது பொருட்கள் இருப்பு இல்லாததால் மேற்கண்டுள்ள பணிகளை மேற்கொள்ள NAPCO வேலுார் கூட்டுறவு சங்கத்தில் எழுது பொருட்கள் வாங்க தோராய செலவினம் ரூ. 3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

**அவசர அவசியம் கருதி பொது நிதியில் எழுது பொருட்களை வாங்கிக்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

**பொருள் எண் :17**

இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவுகளில் பணிபுரியும் அடிப்படை பணியாளர்கள் மற்றும் DBC பணியாளர்களுக்கு 2020–2021ம் ஆண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்களுக்கான கம்பூட்ஸ், தலைகவசம், ஒளிரும் ஆடைகள், முக உறை, கை உறை ஆகியவைகள் கொள்முதல் செய்து கொள்ள தோராய செலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : **பொதுசுகாதார நலன் கருதி பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்து கொள்ளவும், அதற்கானசெலவினம் ரூ.6.00 லட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**(ந.க.எண் 585/எச்1/2020)**

**பொருள் எண் :18**

அரக்கோணம் நகராட்சி பகுதிகளில் உள்ள நகராட்சி பள்ளிகள் மற்றும் அரசுப் பள்ளிகளில் கழிப்பறை சுத்தம் செய்தல் மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ளுதல் போன்ற பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing) 14 தற்காலிக பணியாளர்களை பணியில் ஈடுபடுத்த ஆணையாளர், அரக்கோணம் நகராட்சி அவர்களின் வேலை உத்திரவு கடித ந.க.எண் 483/எச்1/2018 நாள் 25.01.2019 ல் 01.02.2019 தேதி முதல் 31.03.2020ம் தேதி வரை பணி உத்திரவு வழங்கப்பட்டது. தற்போது இப்பணி உத்திரவு 31.03.2020 தேதியுடன் முடிவடைவதால் மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை திரு.G.ரவி, ஒப்பந்ததாரர் அவர்களின் மூலம் 01.04.2020 தேதி முதல் 30.06.2020 வரை ஏற்கனவே வழங்கி வரும் அதே தொகையில் பயன்படுத்தி கொள்ளவும், அதற்கான தோரய செலவினம் ரூ.5.00 லட்சம் கல்வி நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: கல்வி நிதியிலிருந்து ரூ.5.00 லட்சத்தில் செலவினம் மேற்கொள்ள **மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.483/எச்1/2018)**

**பொருள் எண் :19**

அரக்கோணம் நகராட்சிக்குட்பட்ட 36 வார்டு பகுதிகளில் பல்வேறு திட்டப்பணிகள், தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம், 14–வது மத்திய குழு மானிய திட்டப்பணிகளுக்கான மதிப்பிட்டு பிரேரணைகள் தயார் செய்து நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்ப வேண்டியுள்ளது. எனவே இதற்கான மொத்த மதிப்பீடு ரூ.100,000/–க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. திட்டப்பணியின் அவசியம் கருதி மேற்படி வேலைக்கும் தொகைக்கும் நகரமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்**

**(ந.க.எண்.887/இ1/2018)**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**